**Judicial Form No.53.**

**{See Rule 42}**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Cr.P.C)

-----

IN THE COURT OF THE ADDITIONAL SESSIONS JUDGE, VIRUDHUNAGAR

| | | |
|---|---|---|
| Calendar .. .. | ) | |
| Miscellaneous .. .. | ) | |
| Preliminary Register .. .. | ) | **Sessions Case No. 52/2023** |
| Sessions .. .. | ) | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for PW. | { | **Prosecution PW3** |
| | { | Defence |
| | { | Court |

| | | |
|---|---|---|
| Name | : | சக்திவேல் |
| Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(எதிரி ஆஜர் இல்லை, 317 குவிமுச மனு அனுமதிக்கப்பட்டது)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 {Central Act 44 of 1969} on the **02nd day of December 2025.**

முதல் விசாரணை **:** நான் சாத்தூர் தாலுகா நென்மேனியில் பொட்டல்பச்சேரியில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் தொழில் செய்து வருகிறேன். பஞ்சாயத்து தலைவி வேலம்மாளை எனக்கு தெரியும். எதிரி

பெரியசாமியை தெரியும், அவர் எங்கள் ஊர்காரர். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு இரவு சுமார் 7 மணிக்கு நானும், எங்கள் ஊரைச்சோர்ந்த சுரேஷ் மற்றும் தமிழ்செல்வம் ஆகியோர் எங்கள் ஊர் பஸ்ஸ்டாண்டு அருகே நின்றுகொண்டிருந்தோம். எங்கள் ஊர் பஞ்சாயத்து தலைவி வேலம்மாள் வீட்டருகே சத்தம் கேட்டது. பெரியசாமி என்பவர் சத்தம் போட்டுக்கொண்டிருந்தார். நாங்கள் அப்படியே சென்றுவிட்டோம். வழக்கு சம்மந்தமாக எனக்கும் வேறுஎதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டதன் பேரில் அதற்கு அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

அரசு தரப்பு குறுக்குவிசாரணை

போலிசார் விசாரணையில் கடந்த 22.08.2022ம் தேதி இரவு சுமார் 9 மணிக்கு நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த சுரேஷ் என்பவரும் பிள்ளையார் கோவில் தெருவில் நின்றுகொண்டிருந்தோம் என்றும், எங்கள் ஊர் பஞ்சாயத்து தலைவி வேலம்மாள் வீட்டின் முன்பு பெரியசாமி என்பவர் வேலம்மாள் வீட்டினுடைய இரும்பு கேட்டை கல்லால் அடித்துகொண்டிருந்தார் என்றும், சத்தம் கேட்டு வந்த வேலம்மாள் ஏன் இப்படி செய்கிறாய் என்று கேட்டதற்கு பெரியசாமி வேலம்மாளை அசிங்கமாக பேசினார் என்றும், அதற்கு வேலம்மாள் என் மகன் ஊரில் இல்லை என்றும், ஏன் பிரச்சினை செய்கிறாய் என்று கேட்டார் என்றும், அதற்கு பெரியசாமி உன் மகன் இருந்தா என்ன பிடுங்கிடுவானா என்று சொல்லி வேலம்மாளின் தலைமுடியை பிடித்து கீழே தள்ளிவிட்டார் என்றும், அப்போது பஞ்சாயத்தில் தண்ணீர் திறந்துவிடும் குருசாமி என்பவர் ஏன்பா பொம்பளையா அடிக்கிறாய் என்று கேட்டார் என்றும், அதற்கு பெரியசாமி, குருசாமியை அசிங்கமாக பேசி கீழே கிடந்த தெருகுழாய் தண்ணீர் பைப்பை உடைத்து குருசாமியின் தலையில் அடித்து இரத்தகாயத்தை ஏற்படுத்தினார் என்றும், வேலம்மாளை பார்த்து உன் குடும்பத்தை கொலைசெய்யாமல்

விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் செய்தார் என்றும், நானும், சுரேஷ் மற்றும் தமிழ்செல்வம், பெரியசாமியை சத்தம் போட்டோம் என்றும், பின்னர் காயம்பட்ட குருசாமியை, சுரேஷ் என்பவரின் இருசக்கர வாகனத்தில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் - சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

மறுவிசாரணை : இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**/Sd/ S.K.Angalaeswari**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர்.**